உ

சிவமயம்.



கதிரேசன்பேரில்

ஆநந்தக்களிப்பு.

காப்பு.

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலென்றனும் க

பார்புகழ வேதுதி சிறக்க-எங்கள்
பாரமதை யானைமுகன் றன்னருள்பெருக்க உ

தானந்த நடனமயி லேறுஞ்-சுவாமி
சரஹணபவானந்தன் மீதிலருள்சேரும் ௩

ஆனந்தக்களிப்பிதனைப் பாட கையிலே
யாளிமலரடியைகா னனுதினந்தேட ௪

சதுர்முகன்தேவிநயந் தரவே-யிந்தத்
தாரணியிலுகந்தகவி வாணர்ஜெயம்பெறவே ௫

கதிர்காமமானகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணாருளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம் ௬

திசைமெய்த்தபுகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகுயாபார தர்மமதுவாழும் ௭

வசியகுலநகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள்கதிரேசன் சன்னதியில்நானே ௮

சொன்னகவிதன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள்வாராம லென்னையுமேகாத்த ௯

நன்னயமிகுந்த தெய்வானை-யம்மன்
நற்கமலரடியிணையை நான்றுதிப்பேனே ௰

அருமறைகள்புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென்கவிதனக் கருள்தரவும்வேணும் ௧௧

குருமுனியைப்பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும்வாராமல் சபையிலறங்கேற்ற ௧௨

சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்பசயனஞ்செய்த திருப்புல்லாணியிலே ௧௩

நாதனருள்கங்கைகுல சீலன்-தங்கம்
ராமசாமிசொன்ன கவிக்குகந்தவேலன் ௧௪

எச்சரிக்கையென்றிடுமபன் கூற-வந்து
இருபுறமுங்காவடிகள் நின்றுவிளையாட ௧௫

பச்சைமயிலேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத் தென்கலியகற்றும்வடிவேலன் ௧௬

தென்கதிர்மானகர் விளங்க-வந்த
தேவாதிதேவர்ஜெயங் கூறியேமுழங்க ௧௭

அன்பானசனனதி யிலங்க-கதிரை
ஆறுமுகவேலருட மாபதிதுலங்க ௧௮

முன்னாலேகோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன் கோவில்முழுச்செம்பால்வகுப்பும் ௧௯

அன்னமெனும்தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந்தடித்துவிளை யாடிடுங்கூடம் ௨௰

மூதண்டயோகபதி யேறும்-கதிரை
    முத்துலிங்கசுவாமியுட சன்னதியைப்பாரும் ௨௧

நாதமொடுகீதமு முழங்க-வசிய
    நகரத்தார்கட்டிவைத்த சத்திரம்விளங்க ௨௨

காணிக்கைகொண்டுவெகு கோடி-ஜனங்கள்
    கதிரேசன்சன்னதிக்கி வருவார்கள்தேடி ௨௩

மாணிக்ககெங்கைநீ ராட-இங்கே
    மாதவரும்மனிதர்களும் வந்துநிதங்கூட ௨௪

பொன்னலங்காரநகர் வாசம்-எங்கும்
    புகழ்பெற்றநவரத்ன மேவிளையுந்தேசம் ௨௫

சொர்னமிருகதிரைவள மெத்த-தோழி
    சொல்லுகிறேன் நாட்டுவளம்வானுலகுதித்த ௨௬

இந்திரனுடயேவலதி னாலே-வந்த
    எழுமேகமுமொன்று கூடியேமேலே ௨௭

சந்திரனெனவாகவுமே வோங்கி-சத்த
    சாகரமதில்த்தாவி தண்ணீரைவாங்கி ௨௮

மாலெனவிசும்பிடை படர்ந்து-முகில்கள்
    மண்டியேசெற்சித்து மின்னலுமடர்ந்து ௨௯

நாலுதிசைநாடியே தெளிந்து-கதிரை
    நகர்பூமியெங்குமழை மாரிகள்பொழிந்து ௩௰

ஏரிகுளம்வாவிகள் நிறைந்து-வயல்க
    ளெங்கெங்குமேகன்னல் செந்நெலும்வளர்ந்து ௩௧

வீரியமிகுந்தமு தத்தின்-நல்ல
    வெண்கமுகுசோலைமலை மேலெங்குந்தோண ௩௨

தனியேபழுத்துதிரு மாவும்-அதனில்
    தாவியாருகொம்போடே கொக்குகளுமேவும் ௩௩

இனியமலர்வாசனைகள் தேடும்-வீறென்
    றிருபத்துநாலுகால் வண்டினங்கூடும் ௩௪

நாகமதுநாகமதிலேறும்-துய்ய
    நாகமேபுனைந்தசில மாதரையும்பாரும் ௩௫

நாகமலர்சோகுமலர் முல்லை-யிந்த
    நாட்டினிலேகலைபகடுக் கொருகொம்புமில்லை ௩௬

முல்லையிருவாட்சிக ளெடுத்து-அந்த
    முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து ௩௭

வல்லவினைதீரவெனத் தேடி-மாது
    வள்ளிதெய்வானைக் கிடுவார்கள்கோடி ௩௮

சதுர்மறையும்புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௩௯

இதிலேநீராடுவது சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலேமுத்தி ௪௰

கோலமாமலையழகைப் பாரும்-கதிரை
குமரேசனருளாலே வல்வினைகள்தீரும் ௪௧

மூலகணபதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங்கோருக் கருள்செய்தயோகன் ௪௨

மாமேவும்புலிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச்சேடனு ளளவிடமாட்டான் ௪௩

பூமேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
புண்ணியன்தேவருக்கும் மனிதருக்கும்நாயன் ௪௪

பச்சைமால்தனக்கு மருகோனே-சுவாமி
பழனிமலைமீதினிலே மேவுமுருகோனே ௪௫

வச்சிராயுதன்தம்பி மருகா-உந்தன்
மலரடியெனக்குநிதந் தாவேணுமுருகா ௪௬

நவவீரர்துணையான குகனே-நம்பி
நாராயணன்றங்கை யபிராமிமகனே ௪௭

நவமணியணிந்த வொளிமூவர்-நின்று
நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா ௪௮

கனககுண்டலமிட்டநீதா-சுவாமி
கார்த்திகேயாலட்சம் படைவீரர்தானே ௪௯

தனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரிபூரணானந்தசிவபாலா ௫௰

ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௫௧

ஈராறுபன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்குமேறுதி மிகுந்தமெய்யாண்டி ௫௨

ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி ௫௩

ஆண்டிமகனாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪

சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூ ரெட்டிகுடிகுன்றைக்குடியாண்டி ௫௫

மிகத்திருவேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர்வேல்முருக னறுமுகத்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலை விராலிமலை சென்னிமலையாண்டி ௫௭

வாலையருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா ௫௮

விடவரவுபடமும் விசைகெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமசைபடவும் ௫௯

கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
கனவேகமாகவரு மயில்மீதிலங்க ௬௰

மேலாகிவிளையாடு மெய்யா-வெற்றி
காலாயுதத்தையு மெடுத்தமுருகையா ௬௧

சாலோகசாமீப மென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சிய பதவியிலேமுன்னும் ௬௨

ஆகவேநின்றபர நாதாஎன்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா ௬௩

தாகமாயிருக்குதுனைக் காண-கந்த
சுவாமிவருவாயெனது கண்ணெதிரேதோண ௬௪

அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்த வடிவேநமாவோம் ௬௫

அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசத்தி மைந்தாநமாவோம் ௬௬

அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளேநமாவோம் ௬௭

அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் ௬௮

மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந்தமிழ்முனிவன் குருவேநமாவோம் ௬௯

மயிலேறுங்கந்தாநமா வோம்-வட்ட
வடவாவில் மேவுமால் மருகாநமாவோம் ௭௰

மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் ௭௧

மயிலேறுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் ௭௨

திரிபுரபவாவா நமாவோம்-வாலை
சேயனேதிகழொளி பவாவாநமாவோம் ௭௩

பரிபுரபவாவா நமாவோம்-வள்ளி
பாகனேபவநெறி பவாவாநமாவோம் ௭௪

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியே சயலொழி பவாவாநமாவோம் ௭௫

தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை ௭௬

காவாவுன்னிரடிகள் தன்னை-நான்
கண்டெனதுகலிதீர வந்துமென்முன்னை ௭௭

வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்பவிலையோ ௭௮

தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு ௭௯

அஞ்சறிவுமானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடிபிர்ம் மாண்டநாயகனே ௮௰

உன்கிருபைதந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும் ௮௧

அன்புபெரும்வரைராஜன் பேரா-சுவாமி
அடியனுன்னடியிணையைக் காணநீரோரா ௮௨

வாவாயென்றேவாநீ யென்றே-சுவாமி
வடிவேலாவாவெனத் தொழுதுநின்றே ௮௩

எவன்றேடினுலுக் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக்கவிபாடி னுலும்பாடட்டும் ௮௪

நமக்கென்னவென்றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ ௮௫

உமக்குமனமிரங்காத தேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது ௮௬

ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே ௮௭

மெய்யானசரிதையி லனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் ௮௮

தவயோகக்காரர்வெகு வெள்ளம்-ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் ௮௯

அவர்களைப்போல்நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவிலையோ ௯௰

அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ ௯௧

என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கியாளாக வென்னையுமேசேர்த்து ௯௨

ஆளாக்கி யாள லாகாதோ - எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ ௯௩
பாழான மனங்குவியு தில்லையோ - யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே ௯௪
வஞ்சகமில்லாமலே கண்பாரும் - முடிவில்
மறலியுட தூதரெனை வருத்தாமல்க்காரும் ௯௫
அஞ்சுதலை யாரருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யால்வேத னிருந்ததுவுஞ் சிறியே ௯௬
ஆறுதலை கண்டண்டரய்யா - பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரேமெய்யா ௯௭
ஆறுபடை வீட்டுக் கதிகாரா - வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா ௯௮
சத்தியுமை பாலகனே சாமி - எந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதற்கேமி ௯௯
சுத்தபரி பூரணு வுன்னை - ஒதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௱
பொய்யாத வாழ்வருள வேலா - கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா ௱௧
ஒய்யார மானமுரு கோனே - வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவேனனே ௱௨
உரமான வசுரரிடராலே - தேவ
ரோடிமுறையிட்டாரே கைலைமலைமேலே ௱௩
அரனசுரர் மேல்க்கோப மாகி கைலை
யாளிவிழி தனிலேயொரு பொறிசிதறி யேகி ௱௪
சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௱௫
உருவாகி மலர்மீதி லானார்-எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள்மகனார் ௱௬
அப்பவே சென்னியோ ராருய்-மெத்த
வழகான செந்திரு புயங்க ளீராருய் ௱௭
உற்பவ மானமணி ரண்டு-விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டு ௱௮
அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியேகொடுத்தான் ௱௯

கயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னலவர்கள் கருவறுத்தாரே ௱௰
தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன் ௱௰௧
தென்கதிரை மானக ரிலங்கும்-சுவாமி
சிங்காரமா யுனது வருள்கிருபை பொங்கும் ௱௰௨
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில் வேலன் ௱௰௩
சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் ௱௰௪
கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையிலே ௱௰௫
கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகேதயங்க ௱௰௬
செங்காவிப் பட்டாலே கோடி கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி ௱௰௭
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி ௱௰௮
சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத ௱௰௯
பார்க்கவெகு பாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ்பெறவே ௱௨௰
ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகானவாலாத்தி தீபமேதுலங்க ௱௨௰௧
மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார் ௱௨௰௨
மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும்பாரும் ௱௨௰௩
கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி ௱௨௰௪
கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று ௱௨௰௫
சரியான பௌரணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி ௱௨௰௬
வாரிபோல் பெருகிநீ ரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்து நீராடி ௱௨௰௭

கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து ௧௨௮
புள்ளிமயில் வேலர்விரை வாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குளேக ௧௨௯
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு ௧௩0
சித்ரமணி மலரணையில்த் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திலர்கள் மேவி ௧௩௧
கொத்துமுத்து நத்துவளை திருத்தி - யிவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள்பொருத்தி ௧௩௨
இங்கிர்த பணுளகுண நீதா – யெனக்கு
யினியசுக போகமத லீமாவினோதா ௧௩௩
எங்கள்குலம் விளங்கவந்த நேசா - சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா ௧௩௪
அத்தைபெற்ற முத்தேயெங் கோனே - யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயம்மானே ௧௩௫
முத்திரையிட் டிலங்குகொங்கை யாளே - வள்ளி
போகனமே யென்றந்த வேலவர்கையாலே ௧௩௬
கலந்தணைந்த சுகந்தமண வாசன் - எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் ௧௩௭
சலதரத்தைப் பழித்தகுழ லாளே -இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே ௧௩௮
எந்தனுக் கிசைந்த மனையாளே - வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே ௧௩௯
வந்துவெகு நேரமா குதடி - யெந்தன்
மாதுதெய் வானையெனத் தேடிடுவாள்நாடி ௧௪0
போய்வாறேன் விடைதாடி யென்ன - வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன ௧௪௧
வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு - நான்
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபேச்சு ௧௪௨
அங்கேபோய்செலுத்துமதி காரம் - யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் ௧௪௩
இங்கோரண்டு நாளிருந்து போனால் - சுவாமி
என்னகுறை வாங்கிவிடும் காணுமுமக்கதனால் ௧௪௪
என்மனையி லிருக்கையிலே யவளேன் உம்மை
யேன்தேடவேண்டியது ௧௪௫

உண்மையெனக் கின்னதென்று தானே - சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே கசசு
இங்கேவந்து நானிருப்பதாலே - யென்னை
யெங்கையோ வென்றுதெய் வானையொருக்காலே கசஎ
மங்கையருந் தேடுவா ளின்று - யெனக்கு
வளளிநீ விடைதாடி போய்வாறேனென்று கசஅ
இவர்கூறவள்ளிமின்னுளே — சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை கசகூ
அவசர முமக்கென்னயங்கே - சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே யிங்கே கரு0
கூடாது உம்மைவிட மாட்டேன் - மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் கருக
தேடியிங்கே தெய்வானை வரட்டும் - யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகைநீட்டும் கருஉ
பார்த்தே தடிவள்ளி மானே - சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே கருங
ஆத்திர முனக்கென்ன போடி - தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள்கோடி கருச
சொந்தமாய் கிருபை பாராட்டி - அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி கருரு
வந்தபடி யாலவ ளுனக்கு - முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு கருசு
அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம் - வள்ளி
ஆனாலுமில்லறத்துக் கதுதானே யோக்கியம் கருஎ
மடற்கொடி தெய்வானையவ ளிங்கே - நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே கருஅ
போகவிடை தாவென வதட்ட - யெங்கள்
பூவை யெனுங் குறமாதுக் கதிகோபமுட்ட கருகூ
மாகனக மேடையி லிருக்கும் - உமது
மணியாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும் கசு0
தெய்வானை சொந்தமாய் போச்சோ - நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ கசுக
கைமாயஞ் செய்தோமே நாங்கள் - ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்தீரோவுங்கள் கசுஉ
சாதியா ரேசுவா ரோகாண் - நீருந்
தலைமறைய யென்பனைக்கி வருவானே யேன்காண் கசுங

ஆதியிலே யெனையு நினைத்து - வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து கசுச
கூட்டிவந்த நாரதரைக் கேளும் - வனத்தில்
குளத்தருகி லேயிருந்த கரடிபுலிவாழும் கசுரு
காட்டினி லுமக்குதவி செய்தார் - வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் கசுசு
சிவதலங்கள் செயசபைமுன் னாலே - வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே கசுஎ
அவள்மாத் திரஞ்சொந்தக் கிளேயோ - சுவாமி
ஆறுலும் நான்கிழக்கு முகமிருக்கவில்லையோ கசுஅ
வள்ளியிவை சொல்லவே திகைத்து - சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து கசுகூ
கள்ளிபோல் வீணிலிரை யாதே - பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே கஎ0
ரெண்டுசமு சாரமா காது - யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது கஎக
வண்டர்குல மானேயுனை நாடி - வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி கஎஉ
நில்லுநான் போய்வாரே னென்று - சொன்ன
நினைவறிந்து வள்ளியவள் சிறியெதிர்நின்று கஎரு
வல்லப முமக்கென்ன காணும் - எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீபோகவேணும் கஎச
என்சமர்த்தைப் பாருமினி யென்றே - வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே கஎரு
அன்புற நெருங்குவது கண்டார் - வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் கஎசு
சொல்லுகிற சமாச்சார மென்ன - உமது
தொழிலேநான் னெடுகிலு மறிந்துமினி யென்ன கஎஎ
நல்லதினி பேற்கொண்டு பார்ப்போம் - உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லிக்கேட்ப்போம் கஎஅ
தேவசபை யிலேசொல்லிப்பாரு - அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசிரு கஎகூ
ஓவியமே உன்னுறுதி கேட்க - வெழுதும்
உடன்பிடிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க கஅ0
உடன்பிடிக்கை முறியெழுதித் தாறேன் - வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் கஅக

கடக்கவெனைத் தள்ளாதே மானே - யென்று
கட்டிமுத்த மிட்டது கசப்பேறுவானே ௧௮௨
தனியே வனத்திலிரு பேருங் - கூடுஞ்
சையோக வேளையிலே பார்த்தென்னைநீரும் ௧௮௩
இனியசெந் தேனேகற் கண்டோ - உந்த
னிதமென்று சொன்ன துவு மில்லையோவுண்டோ ௧௮௪
முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ - யிப்போ
மூத்தகுடி யானுமக்கு சர்க்கரைபோலாச்சோ ௧௮௫
என்னைநீர் வசைசொல்வ தேனோ - சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ ௧௮௬
தந்தையுங்கள் தேட்டையெடுத் தாரோ - யெங்கள்
சாதியார் வந்துமிதந் தின்றுகெடுத்தாரோ ௧௮௭
எந்தனுற் குறைகளே துண்டோ - சுவாமி
இழுக்கெந்த சாதியிலு மில்லாமலுண்டோ ௧௮௮
மங்களகல் யாணமதில் நல்லால் - அந்த
மணவறையி லென்தகப்ப னிட்டநகையல்லால் ௧௮௯
உங்களிடம் வந்தநாட் கொண்டோ - யெனக்கு
ருத்திராட்ச வடத்துக்கொரு நவமணியுமுண்டோ ௧௯0
மாதிவை யுரைக்கமுத் தையன் - வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்லுவார்மெய்யன் ௧௯௧
ஏதடிநீ பேச்சதிகங் கொண்டாய் - வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்னகண்டாய் ௧௯௨
குபேரன்மகள்போல பேசாதே - நொப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியேசொல்லாதே ௧௯௩
சபையார்க ளென்னவறி யாரோ - யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ ௧௯௪
உடுத்திவந்த துணிக்கிவேறுண்டோ - களிம்பு
ஊறிய பித்தளை யோலைக்கிவேறுண்டோ ௧௯௫
தொடுத்திருந்த கருகமணி யோடே யென்னை
தொடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடை ௧௯௬
வண்ணார்கள் வெளுக்காத கலையுங் - சுத்த
வாணியர்கள் யெண்ணையிட் டறியாததலையும் ௧௯௭
புண்ணுக்கு போயிழுக்கு மேலுங் - காட்டில்
புரண்டிசெடி முளைமிழுத்து சுரண்டிவிட்டகாலும் ௧௯௮
எப்போதுங் காய்கிழங்கை தின்று - நீயும்
இருந்தகெதிதெரியாதோ வரும்போதென்பின்னும் ௧௯௯

அப்பவே நானழைத்து தந்து - நல்ல
வாபரண மானதையு மழகாயணிந்து உ௱
செம்பவழ மாளிகை யமைத்து - உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல்நேமித்து உ௱க
நம்பிநான் செய்ததை மறந்து - வள்ளி
நாயகமே பேசுவது மென்னடியிகழ்ந்து உ௱உ
மாதேநீ பதறாதே வாடி - யெந்தன்
மனமுழுது மறியாமல் சொல்லாதேபோடி உ௱ங
கோதையே யிதுவென்ன மூர்க்கம் - உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம் உ௱ச
சாராயங் கள்ளுகள் குடித்து - குறவர்
சந்திக்கி சந்தியே சண்டைகள்பிடித்து உ௱ரு
பூராயம் தெரியாமற் கத்தி கண்ட
பூனைகளை யொவாரமுசலென்றுகுத்தி உ௱சு
தின்பதுவு முண்டதிகமாக - குறவர்
சேரியிலே நீ பழகி வந்ததைபோக உ௱எ
செம்பவள வாயாளே யென்று - சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்டு உ௱அ
விண்ணணம் பேசுவது சிரோ - சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ உ௱கூ
கண்ணப்ப னெச்சிதிங் கலையோ - சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றதுவுமிலையோ உகo
புத்தியுமக் கில்லாதே போமோ - கெட்ட
புனக்குறவர் பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ உகக
யெத்திசையும் புகழ்பெற்ற நாதா வென்று
யிவள் சொல்லும் வகைகண்டு கூறுவார்தோதா உகஉ
அடந்தேரு வார்குடியி ருந்தால் - குரவர்
அவர்தனக் கேகிலவுக் கில்லா திருந்தால் உகங
கடன்வாங்கு வார்சம்மதித்து-தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து உகச
குடுத்துவிட்ட பணத்துக் கீடாக - வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன்வெகுவாக உகரு
அடுத்தவளை யனுதினமுங் கூடி-யிவர்கள்
அஞ்சாறு பிள்ளைகளைப் பெற்றபின்தேடி உகசு
பணங்கொடுத்து திருப்புகிற போது-பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள்மாது உகஎ

குணமாக முன்னீடு வைத்த-பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதியிலேமெத்த ௨௧௮
இதுபுதுமை யிவ்வுலகிலுண்டோ - வள்ளி
யேந்திழையே யிதைவிட லெச்சைவேறுண்டோ ௨௧௯
கதிகொண்ட மயில்வா கனத்தார் - இந்தக்
கதைசொல்லவே வள்ளியவ ளெதிருரைத்தாள் ௨௨௦
குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ் - சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும் ௨௨௧
மறந்தீரோ நீரறிந்த திலையோ - நொப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலையோ ௨௨௨
சிந்தைமகிழ்ந் தொருபெண்ணைத் தூக்கி - உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந்ததுக்குச்சாட்சி ௨௨௩
நந்திகேசு பரர்சொல்லக் கேட்டேன் - சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான்சொல்லமாட்டேன் ௨௨௪
ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார் - உங்க
ளப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫
கேட்டுப்பா ருமதுதாய் ஐயோ - ஒற்றை
மாட்டுக்காரனைவைத் திருந்ததும்பொய்யோ ௨௨௬
கண்ணு யிரங்கொண்ட நேத்தி - நொம்மான்
பெண்ணாசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭
பெண்ணொருவர் கொடுக்காத தெதினால் - நொண்ணன்
பெருவயறு கொண்டுவழுக் கரையிலிருந்ததினால் ௨௨௮
அண்ணனுமே மத்தளங் கொட்ட - சொந்த
அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯
விண்ணவர்கள்கூடியே நகைக்க - வந்த
வேதியரும் மாதவருங் கண்டுபிர்மிக்க ௨௩௦
தேவடியாள் போலுமது வன்னை - கூடுந்
தேவசபை யிலேநின்று ஆடலையோமுன்னே ௨௩௧
பாவலருக் கருள்புரியுஞ் சீலா - யிதையும்
பார்த்தவர்கள் சிறியாரோ தங்கவடிவேலா ௨௩௨
பத்மாசூர னுக்கு மிகப்பயந்து - உங்கள்
பரமசிவ னோடலையோ காட்டுவழிநுழைந்து ௨௩௩
கைப்பொருளு மில்லாமல் தேகி - யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி ௨௩௪
கும்பமுனிக் கருள்புரிந் தோரே - யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்பானயென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கள்ளி ௨௫௬

குதிகொண்ட வனக்குறவச்சாதி-வகையை
கூறறிந்துசொல்லுகிறேன் கேளுமவர்சேதி ௨௫௭

சதிர்பெருகுந் திருவிழாக்கடையில்-ஜனங்கள்
சந்தடிகளாகவே சயனிக்குமிடையில் ௨௫௮

கூசாமல்கூடவே படுத்து-தூக்கம்
குலையாமல்பணிதிகளைக் கழற்றியேயெடுத்து ௨௫௯

பேசாமலோடுவது கண்டுகுறத்தி
பெரியதனக் காரர்களுமேபிடித்துக்கொண்டு ௨௬௦

வம்பிலேதலைமயிரைக் கட்டி-குாத்தி
மார்பிலேபோடுவார் சொல்லென்றுகிட்டி ௨௬௧

செம்பாணிகொண்டுமே யிருத்தி- அவர்கள்
சேலையையுரிந்தம்மண மாகவேசிறுத்தி ௨௬௨

அடிதண்டமாகவே யடிப்பார்-குறவர்
அப்பவுமெடுக்கவில்லை யென்றுமேதடிப்பார் ௨௬௩

தடியடிக்கியசையாத சாதி-குறவர்
சங்கைகெட்டுநிற்பார்கள் தெரியுமவர்சேதி ௨௬௪

என்றிவருரைக்கவுமே மாது—சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது ௨௬௫

தொண்டர்தொழு கின்றமயிலேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள் குலவளமைகளைப்பாரும் ௨௬௬

அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள் கூடிவரு மாய்ப்பாடிவாழும் ௨௬௭

இடையருடவளவிலென் னளும்-உறியி
லிருந்தவெண்ணெதிருடினதை யாரென்றுகேளும் ௨௬௮

அன்றுடன் சோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறுல்வரிந்து ௨௬௯

ஒன்றாக மாதரொருபக்கங்-கூடி
உரலோடேகட்டினதைச் சொன்னலும்வெட்கம் ௨௭௦

கட்டுண்டதும்ரோச மிலையோ-பெண்கள்
கட்டியசேலைகளைக் களவாண்டதிலையோ ௨௭௧

வெட்டியசமர்க்களத்தி லேருப்-கிருஷ்ணன்
விஜயனுடைகுதிரைகளை மேய்க்கலையோபாரும் ௨௭௨

ஊத்துகிறகஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் ௨௭௩

களையாகுதெனவந்து முட்டிநீரும்
காரியங்கொண்டபின் பேசுகிறீர்கெட்டி உ௬௦

வலியநான்வந்தேனோ தொட்டுநீரும்
வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென்னசெட்டு உ௬௧

சலியாமல்நீ றுருதி சொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகால மானாலுமென்ன உ௬௨

பொன்னடி துலங்கியபொன் மாமி-பெற்ற
புண்ணியனேயனுதினமு மசலாமல்சாமி உ௬௩

யென்னருகிலிருமென்று கேட்டால்-சுவாமி
யென்குலத்தைநீர்பழிக்க யுமக்குவிளையாட்டா உ௬௪

வையகத்துக்சேர்க்காது யென்னை-நீரும்
வஞ்சகம் தாயிழந்து பேசுவதுதன்னை உ௬௫

தெய்வானையோசொல்லிவிட்டாள் எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவுசூதுசொல்லி தொட்டாள் உ௬௬

எப்படியோநானறிய வில்லை-லோக
மெங்கும்நீர்போகாத விடமொன்று மில்லை உ௬௭

இப்படியுமருந்திட்ட தாரு-உமக்கு
யேலாதோசொல்லவந்தமங்கையர்கள்பேரு உ௬௮

வருந்திவிருந்தளித்தவளைச் சொல்லும்-அவளை
மயிர்பிடித்துகொண்டாறேன் சற்றேயிங்கேநில்லும் உ௬௯

மருந்திடுமயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்லமாட்டீரோ நானெதுவுங்கேட்டால் ௩௭

முருக்குவளை காதிகளே வாடி-நம்ம
முத்துலிங்கசுவாமியை கூட்டிவாபோடி ௩௭௧

கருதுமருந்திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங்கந்தருக்கு கைபார்க்கவேணும் ௩௭௨

மின்னாரேயென்றிவளுஞ் சொல்ல-யெங்கள்
வேலரிதுபுதுமையெனக் கேட்டவருமெள்ள ௩௭௩

யென்னடிவிண்யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டிலேயிருந் துண்ணதைநீகண்டாய் ௩௭௪

என்னுடையசொல்வருதி மீறி-நீயும்
எதிர்பேசி னதினாலேயுனைநான்சீறி ௩௭௫

சொன்னவகையல்லாது கண்ணே-சும்மா
தோகையேநானுமுனை பேசுவனோபெண்ணே ௩௭௬

மயங்காதே நீவள்ளிமாதே-உந்தன்
மனமறியநான்சொன்ன தல்லாதிப்போதே ௩௭௭

ஜெயமாகநான்போயி வருவேன்-வள்ளி
தினமுமுனைப்பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩௱௮

உந்தனைவிட்டகல்வெனோ மானே-யென்று
யுபசாரஞ்செய்தங்கி ருக்கையிலேதானே ௩௱௯

கந்தனையுங்கோவிலுக்குள் தேடி-அங்கே
காணாமல்தெய்வானை யம்மை மனம்வாடி ௩௱௰

மங்கையடரேசந்த்ரப்பிர காசன்-அந்த
மாணிக்கசெங்கைக்கு போனமுருகேசன் ௩௧௧

யெங்கேயென வேலவரைத்தேடி-நீங்க
ளிதுநிமிஷம்வரவேணு மென்றிடவேயோடி ௩௧௨

தாதியர்க ளெல்லோருஞ்சென்று-யெங்கள்
சண்முகவேலாயுதனைத் தேடினரென்று ௩௧௩

ஆதிசிவமாணிக்க செங்கை-தீர்த்த
மாடவந்தவேலவரைக் கண்டீர்களோயிங்கே ௩௧௪

பாதிபிறைநுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணோமென்று தேடிவதினாலே ௩௧௫

கதித்தபுகழ்கொண்ட முனிவோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டோ சொல்லுவீர்நீரே ௩௧௬

காணிக்கைகொண்டு வந்தோரே-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனாரே ௩௧௭

மாணிக்கசெங்கைநீ ராட-யிங்கு
வந்தவரைக்காணீர்களோ யினியெங்குந்தேட ௩௧௮

பாங்கியர்கள்நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக்காரர்தெரு வீதிவழிநாட ௩௧௯

ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ்சிந்தையி லறந்தன்புகொண்டு ௩௨0

நினைவில்மறக் காததெய்வானை-யிந்த
நிமிஷமேகூட்டிவா வென்றேவுஞ்சேனை ௩௨௧

எனையழைக்க வேணுமென்றுதேடி-வாறார்
ஏந்திழையே நான்போயிவரவும்விடைதாடி ௩௨௨

தாடியென்றுசொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ்சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து ௩௨௩

தேடிவந்தபேர்களைநா னடிப்பேன்-அந்த
தெய்வானைவந்தாலு மேசண்டைபிடிப்பேன் ௩௨௪

என்னுடையசணவனையுந் தேட-அவளுக்
கென்னவதிகாரம்விடை கேழ்க்குறீரோட ௩௨௫

மன்னவாயிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில்நின்றே ௩௨௬
யெனக்குரியயானே நீ கோபம்-இப்போ
யென்பேரில்வைக்காதே வீண்மனஸ்தாபம் ௩௨௭
உனக்குநான்பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள்செய்யாதே நான்பறப்பேனே ௩௨௮
போய்வாறேன்வள்ளி சுயவாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடிதெய் வானையிடமேக ௩௨௯
வாய்திறந்துசொல்லுமனை மகிழ்ந்து-யென்று
வடிவேலர்கேழ்க்கவே வள்ளியுமுகந்து ௩௩௰
மறைபுகழு கின்றவடிவேலா-சுவாமி
மனவருத்தமில்லாமல் போய்வாருஞ்சீலா ௩௩௧
இறையவருக்கு கந்தமகனாரே-யென்று
யிவள்சொல்லவேலர்வழி கூடிநடந்தாரே ௩௩௨
சித்திரவடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்ததாதியர்கள் கண்டடிபணிந்தார் ௩௩௩
வெற்றிமயிலோனன்பு கொண்டுகோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று ௩௩௪
மங்கையரேயெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மைதன்னுடைய கோவிலுக்குப்போனேன் ௩௩௫
செங்கமலமாதேயென் கண்ணே-யிப்போ
தேடினதுமென்னவகை சொல்லாயோபெண்ணே ௩௩௬
தெய்வானையென்றூர் துணிந்து-அந்த
தேவிசெவ்வேள்பாத மலரடிபணிந்து ௩௩௭
வைபோகமானவடி வேலே-உடைய
மணவாளாஉமக்குநித மிதுதானோவேலே ௩௩௮
இளையாள்மேலிருக்குகிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் ௩௩௯
அழையாதவிருந்தோ நீர் காணும்-வள்ளி
யவன்மனைக்கிதில்வலியப் போகவோவேணும் ௩௪௰
முழுக்கவேயும்மாலே யேச்சே-சாதி
முறைதவறிக்குறவருடசம்மந்த மாச்சே ௩௪௧
இழுக்கான சாதியிலேகி-மாலை
யிட்டாலுமேன்மையது தருவாரோயோகி ௩௪௨
அடிக்கடியேயவள்மனைக்குப் போனால்-மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானல் ௩௪௩

குடிதனிலுயர்ந்தவளு மில்லை-வள்ளி
குறவர்குலமானதால் சொன்னேனென்சொல்லை ௩௪௪

நிசமென்று நீரெண்ணுவீரோ-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமதவீரோ ௩௪௫

அசையாம லானந்தமீறி-வள்ளி
ஆசைகொண்டுபேசுகிறீ நானுமக்குப்பாரி ௩௪௬

யாகிநானெடுத்ததென்ன கோட்டை-புவியில்
அறியாரோநீரெனக்கு தேடிவருந்தேட்டை ௩௪௭

தேகியெனவாண்டிபோ லானீர்-வள்ளி
தேவியவள்தினைமாவை தின்கவேபோனீர் ௩௪௮

திரிபுவனையருள்பெற்ற பாலா-உமது
சித்தமதுவெப்படியோ திரைவடிவேலா ௩௪௯

அரிமருகரேயென் றுரைக்க-யெங்க
ளாறுமுகனைசொல்லுவார் தெய்வானைமெய்க்க ௩௫௰

மானேநான்உன்வருதி பெற்றேன்-பின்பு
வள்ளிதனைமாலையிட்டுகூட்டி வந்துவைத்தேன் ௩௫௧

தேனேயென்மேற்பிழைக ளில்லை-உனக்கு
தெரியாதோவீணில் பேசுவதுதொல்லை ௩௫௨

கோவிலுக்குநீபோடி யென் று-யெங்கள்
குமரேசன்சிம்மா சனத்திலேயென் று ௩௫௩

சேவலொருகையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடிவேலவரு மேகொலுவிருக்க ௩௫௪

சூடதீவாரா தனைக்கி-வந்து
சூழ்ந்தார்கள்கோடானு கோடியன்றைக்கி ௩௫௫

அடியவர்பணிந்துதுதி பாட-கதிரை
ஆறுமுகன்மீதினில் கவிமாலைசூட ௩௫௬

சிம்மாதனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயயெனவந்தவர்கள் சூழவேபெருக்க ௩௫௭

அம்மாபரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடன்னருளுவா ராருமுகவேலன் ௩௫௮

துன்பவினையணுகாமல்த் தானே-நீங்கள்
சுகமாகவாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ௩௫௯

தென்கதிரை வேலருளாக - வந்த
தேவர்களுமனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௩௬௰

சித்தர்களும்வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ்தனக்குதவி செய்சுப்பிரமணிய ருசுக

கர்த்தனருளாலேகுறை யில்லை-ஆறுங்
கதிர்காமமென்றாலும் வறுமைகளுமில்லை ருசுஉ

தேவர்களுமுனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலுமயனாலு முமையாளும்வாழி ருசுரு

நாவலரும்பாவலரும் வாழி-வள்ளி
நாயகன்மேற்கவிபி தென்னாளும்வாழி ருசுச

புள்ளிமயில்வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும்நகரத்தார் புகழ்பெறவேவாழி ருசுரு

வள்ளிதெய்வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னாளும்வாழி. ருசுசு

கதிரேசன் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.

உ

சிவமயம்.



கதிர்காமத்துயேசல்.

சீர்வளருங்கிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவினாயகனை யெண்ணியே - வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே க

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணைதன்னைமற வேனே - கந்த
வேளெனுமெங்கள்முருகோனே உ

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன் குருவைப்பணிந் தேற்ற - வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த ந

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள் சேரும் - இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் ச

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவலக்கொடிதுலங்கு தோதையா - இந்த
மாவளமாநகரில்த் தானையா ரு

மாவளமானயிந்த மாநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகோன் பெண்ணே - வேல்
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே சு

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா எ

அந்தாபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வோரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி அ

சேனாதிபதியிவ ரானையேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனே-வெகு
அருமையாயீன்றவளார் வேலனே கூ

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளெங்கள்பா மேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்வரி ௰

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரோ
கயிலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கொயிலாசொல்லுமறுசீறு கக

ஒயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனை யாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி கஉ

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா கங

ஏனெரித்தாரென்றாயே மானேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனே னெய்தான்-சிவன்
வாதுக்கனலாகவேதான் செய்தான் கச

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிஜயன்வில்லை
வாங்கிசிவனையடித்தே னைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான் கரு

தாங்கினதுதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாரருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வாறகந்தன் தந்தையார் கசு

ஆனைமுகம்பெரும் பானைவயறிலங்க
அந்தாயிருக்கிறாரே பாரையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா கஎ

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்க
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளித்
தனியகுமரன்தமை யோன்கண்ணே கஅ

இனியகுமரனையும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிர்தப்பிள்ளை யேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதி தானோ கசூ

வேஷமெடுத்துகண் டேசிவள்ளியஞ்சி
வேலெனுங்கந்தனைக்கொண் டாடினால் ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள் உ0

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி நேரே-குற
மங்கையைக்கூட்டிக் கொஞ்சினாரே உக

மங்கைகுறவருட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி உஉ

சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோமணமாலை-திருப்
பூட்டவில்லையோ புவி மேலே உங

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளிலே
பூமணஞ்செய்தாரடிவேலன்-ஆழி
வாமணன்தங்கையருள் பாலன் உச

வாமணனேமஞ்செய்து நேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்த
தந்திமேலேறிவாற தென்ன உரு

தந்தியிலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டிக்கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே உசு

இங்கேவளமையென்று லெங்குப்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே உஎ

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கர்ப்பூரதீபமதைத் தாண்டி-வாறார்
சுப்பிரமணியனுக்கே தாண்டி உஅ

தாண்டியுபசரித்து வேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா உகூ

சித்திரமானவன் சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப்பாரடி ௫௦

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றாலவ ராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த வூரு ௫௧

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றாறா ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டை யாரடி ௫௨

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா ௫௩

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் ௫௪

என்னேரமுங்கொழும்பில் சொன்னயாபாரஞ்செய்தால்
யிந்தக்கதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே ௫௫

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமதப்
பௌரணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்களதோறும்வெகு சீரடி ௫௬

வருஷங்கள்தோறுமிங்கே வருவாராஞலுஞ்சொந்த
மானகர்க்கேகிஞலப் போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண் ௫௭

ஆருகாணென்றுய்புக ழேருப்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள் ௫௮

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிருந்தவரோ தோனும்-நல்ல
கல்விமிகுந்தவரோ காணும ௫௯

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டையாருக்கே ௬௦

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டுப்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா ௬௧

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்ச்செய்துவந்த தோநினால்-புவியி ௪௨
லிவரேநகரத்தாரென் றோதினார்

இவர்களைப்போலனேகர் யெவரோதர்மஞ்செய்தார்
யேனையோகாணுமந்த நாளில்லை-அப்போ ௪௩
தானவர்க்கந்தபே ரேனில்லை

பேர்புகழ்சரிதைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினால்நகரத்தாரே-யென்று ௪௪
யெத்தலத்திலுமுரைத் தாரே

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தாணையா-பொன்னால் ௪௫
சிறக்கவலங்கரித்த தாரையா

ஆரென்றாய்ப்பெண்ணேயெங்கும் பேறானதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பித்த தாரடி-வடி ௪௬
வேலனருள்நகரத் தாரடி

வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனார்-சபை ௪௭
யாவும்புதிப்பிக்கிற தாரையா

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியில்ப்புகழ்நகரத் தாரடி-முகில்கள் ௪௮
குவியும்தண்மைபோல்கொடையாரடி

கொடைகள்தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயற்சியுள்ள வாழ்வுள்ளோர்-புகழ் ௪௯
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர்

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம்நிலை நாட்டினார்-நிதியம் ௫௦
சுபஜெயமங்களத்தைச் சூட்டினார்

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஒகோ ௫௧
மன்னவருமக்கெந்த தேசம்

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம் ௫௨
ராமசாமியென்பது நானடி

நானடிக்கடிகந்த நாதன் தனைப்பணிய
நல்லதினங்களெப்ப காணும்-அதைச் ௫௩
சொல்லநாயிங்கேவர வேணும்

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்யாதும்
தோதானகார்த்திகைக்கித் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி ௫௪

பாதகந்தன்னைப்பரி காசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫

காணுந்தலமிருந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் போகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி ௫௬

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு ௫௭

சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி ௫௮

ஆண்டிக்கிவ்வுலகமெல்லாம் வேண்டியபதியென்றால்
அத்தலங்களிலெது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோணும் ௫௯

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவால்கதிரை நாட்டார் ௬0

நாட்டாரடியவர்மேல் நட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்செல் வாரோ-நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ ௬௧

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தன்மருக னூர்க்கே-யெண்ணி
வாசமாய்நம்பிடந் தோர்க்கே ௬௨

வசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ லாலி-யினி
கூறும்ஜெயமங்கள வாழி ௬௩

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி ௬௪

கதிர்காமத்துஏசல்.

முற்றிற்று.

௨

சிவமயம்.

கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமேல் க

மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே. ௨

சுந்தரரீரணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவளை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர்களைப்போற்றி ௩

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க
வந்துதவிசெய்யவேணுமம்மாநாளும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா ௪

கந்தன்கதிர்காம வேலனேபுவி
கார்க்குமறைமுத லோலனே
யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே. ௫

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்கசெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் தீட்டுங்கடி ௬

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்னப்பட்டுச் சேலைகட்டி
சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண்டாடுங்கடி ௭

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிற்சபைசொல்லுறேன் கேளுங்கடி ௮

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக்கொண்டாடவே
யேதுபிழைகளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கியென்னையாளும் ௯

ஆறுமுகனென்று பேருடையானென்னை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றியகாலுடையான் ௰

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்முருகன்றன்னை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி ௧௧

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவலெங்கும் தூத்தினர் ௧௨

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோங்கும் ௧௩

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும் ௧௪

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மரைக் கும்பலடி .
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும் ௧௫

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே ௧௬

வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களுஞ் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும். ௰எ

குமரன்கோவி லிலங்குதபாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கி மாடமும். ௧அ

என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்த்தானிகராலதும் சிங்களவர். ௰௯

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்
மன்னரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள். ௨௰

புத்துமதத்திலுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிருந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும். ௨௧

தெய்வானைக்கொத்த மலர்கள்கொய்வார்
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨

யெண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி. ௨௩.

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டிஅந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. ௨௪

சிறப்பைச்சொன்னவ ரேகாணும் அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனால் நடந்தோணும் ௨௫

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியில்த் தீவுமிங்கே
உண்டானகாரணந்தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா ௨௬

சொல்லுகிறேன்கேளடி மின்னாளேதேவர்
சொன்னசப்தத்தால் முன்னாலே
வெல்லவேமாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே ௨௭

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும். ௨௮

ஏழுசுற்றுக் கோட்டையாக்கியே யிதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமொன்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே. ௨௯

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரேதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே. ௩௰

கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண் டேதிகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான். ௩௧

சீதையினாலே மனமுகந்துராமன்
செர்ப்பசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரியெல்லை கண்டறுதி. ௩௨

பரப்பிலேபத்து யோசனையாய்கவிப்
படைமலைகொண்டதற்கிணையாய்
உரத்துயோசனை நூறுமட்டும்அணை
உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும் ௩௩

நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியதிரு
வணைசிதறுண்டு தான்மறைய. ௩௪

பின்னாலிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்போக்கி
அன்னாள்விபூஷண னாண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார். ௩௫

நாட்டமுள்ளகயல்க் கண்ணாளேலெங்கை
நகரம்நாள்சென்று பின்னாலே
கோட்டையழிந்து கடலாச்சுயிது
கொஞ்சமாய்த்தீவிங்கே ஆண்டாச்சு ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சிபெரி
யோர்களுலாவு மிடமாச்சு. ௩௭

நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்யிதில்
யிருந்தாசிட்டான் யேச்சவனும். ௩௮

நத்தியேநாகர் சிலகாலம்மேல்
நாட்டையாண்டுவருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினார்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினார். ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி. ௪௰

தலைமன்னாரென்று பேட்டைக்கட்டிராஜன்
தப்பனைநாடென்றுகோட்டைகட்டி
இல்லவிமையைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர்மகள்கூட. ௪௧

செப்பமுடனிந்த யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்

அதற்குமுந்திய ராஜர்கொடிக்கட்டி
    ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு
மதிப்பதாக்கிடந் தோணுமலைக்காடு
    மண்டியிருப்பதும் தானுமே. ௫௯

இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
    இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
தங்கையுடனர சாளையிலேசீமை
    தன்னிலிருந்தந்த வேளையிலே. ௬௰

சிங்காரக்கப்பலில் பறங்கியே யிந்த
    தீவுக்குள்ளேவந்து யிறங்கியே
தங்கச்சிரகம் தனைவகுத்துப்புத்தர்
    தாவுங்கழனித் திசையடுத்து. ௬௧

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
    கொழும்பென்றுசொல்லி பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
    விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி. ௬௨

தொட்ட திருக்கோண மாமலையும்அந்த
    துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்தள்ளி விரைவாகவந்து
    உலர்ந்தாக்காற ருசாராக. ௬௩

ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
    ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
    மேதினியையெல்லாம் சீர்த்திருத்த. ௬௪

கும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார்யிந்த
    கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிஉற்றார்கோடு
    வங்காளக்கச்சேரி கட்டலுற்றார். ௬௫

கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெரும்
    கள்ளர்களைச்சுட்டு யறுத்திட்டார்
வண்டிக்கிரோட்டுக ளுண்டுபண்ணியிதில்
    மாகாணங்களாய்த் துண்டுபண்ணி ௬௬

துறைமுகங்களை நோக்கிகாப்பித்
    தோட்டங்களையெல்லாம்சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்சேரு
    நிறைந்ததீர்வைப் பணங்களும் ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபிசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
இங்கிலிஷ்காரர் தன்னரசே. ௬௮

பூட்டிறயிலையும் நடத்தினரெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினர்
தாஷ்டிகமான கடலிலேக்கியூட
தடுத்தணைகட்டி யேநெருக்கி. ௬௯

தண்டவாளச்சூட்சம்வைத்தாரே மலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. ௭௦

தண்டமிழ்சேர்புவி பெத்தவளாம் யிந்தியா
சக்கரவர்த்திபட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளைப் படிநடத்தும் ௭௧

இங்கிலீஷ்காரரா லேயல்லோநம்ம
இந்தியாவும்லெங்கைத்தீவுமல்லோ
கங்கையும்சிங்காரமுண்டாச்சு வெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. ௭௨

பூமியில்கள்ளர் பயம்போச்சு வெகு
புத்தியும்வித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால் ஒரு
தாழ்வொன் றுமில்லையே தோழிப்பெண்ணே. ௭௩

தாழ்வில்லாத்தண்மை யுடன்வாழும் கவி
சாற்றியமன்னவ ரேசேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. ௭௪

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டும்பின் னோரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணேரேவர்ன்ன
கோல்விழிக்கயல்க் கண்ணேரே. ௭௫

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேயதா யுகத்திலே

தீனநாகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதில்
தானமும்தர்பமும் செய்யவென்றுயன்ன
சத்திரங்கட்டின தார்காணும். ௧௦௯

கட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுசந்ததர்மம் மடம்சமைத்தார். ௧௧௦

உசந்ததர்மம் மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைத்தேடியன்னம்
ஈவதுமுண்டோ பனப்நாடி. ௧௧௧

நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு. ௧௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ. ௧௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்தலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனுங்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி. ௧௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றுடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன. ௧௧௫

வளமைமேவழத்தின் மேல்மிகுந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
சலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி. ௧௧௬

கந்தனுக்கேர்த்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௧௧௭

தேறுமேலேறும் வழமையில்லைச்சித்திர
தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீரழுப்பானதைப் பாருங்கடி. ௧௧௮

நீரழுப்பென்றதும் தோன்றலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கிலையே
தேருமின்னுட்டு வழமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா, ௧௧௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யவிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீரழுப்பேனென்பதும் மெய்தாண்டி. ௧௨0

மெய்யான ஆறு முகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையனும்
தையர்மேவும் கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ, ௧௨௧

முத்தியுண்டிமினைத் தானுமடிதவ
முத்தர்முகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பணி
சேராதருள்வார் முருகேசன். ௧௨௨

கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்பெரிய
வாசமிருந்த தமிழதனைச்சொன்ன
மன்னவரே யுமக்கெந்தனூரு. ௧௨௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மாணகராம் திருப்புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டித்தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௧௨௪

பேரையும் ஊரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேகீரும்
தானிங்கேவந்த வயணமென்ன. ௧௨௫

வந்துகொழும்பதனில்ச் சிறந்துவெகு
வாவமதாச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி. ௧௨௬

கைதொழுதேற்றிய மெய்வாசன்நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனுமேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா. ௧௨௭

சொல்லசொல்லிக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்று மிப்பாடவர்க்கும்
தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தாள்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால். ௧௨௮

அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம். ௧௨௯

தீராதநோய்தனை தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்துநம்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
நாதன்செந்தூரு முருகனிவன் ௧௩௦

தேவசேனாதி பதிதாண்டிகூவும்
சித்திரசேவல் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
முழங்கக்கும்மி யடியுங்கடி. ௧௩௧

சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
விம்மானிலத்தவர் போற்றியேஅவ
ரெண்ணிவந்தபடி நேத்தியே. ௧௩௨

செலுத்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் மெத்தவடிகந்த
சாமிக்கிசிங்காரம் நித்தமடி. ௧௩௩

முப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்குந்தரு
நாவலர்க்குந்திசை காவலர்க்கும். ௧௩௪

சிங்காரக்கும்மி தமிழ்சிறக்கும்நம்ம
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி. ௧௩௫

சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம். ௧௩௬

கதிர்காமக்கும்மி.

முற்றிற்று.

உ

சிவமயம்.

மங்களம்.

ஆதியாம்பரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்

மங்களம்-முற்றிற்று.